ஆணையர் (வணிகவரிகள்)
E-51690581117
10 JUL 2023
எழிலகம், சென்னை–600 005.

சுருக்கம்

வணிகவரித் துறை – தமிழ்நாடு வணிகர் நல வாரியம் – மாற்றியமைத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது..

---

வணிகவரி மற்றும் பதிவுத்(டி2)துறை

அரசாணை (நிலை) எண்.70 நாள்: 07.07.2023
சோபகிருது ஆனி 22,
திருவள்ளுவர் ஆண்டு, 2054.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.332, வணிகவரி மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 11.05.1989.
2. அரசாணை(நிலை) எண்.725, வணிகவரி மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 25.09.1989.
3. அரசாணை(நிலை) எண்.82, வணிகவரி மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 27.02.1992.
4. அரசாணை(நிலை) எண்.418, வணிகவரி மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 29.12.1995.
5. அரசாணை(நிலை) எண்.557, வணிகவரி மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 10.12.1997.
6. அரசாணை(நிலை) எண்.142, வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள் 13.11.2006
7. அரசாணை(நிலை) எண்.101, வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை, நாள் 22.07.2009.
8. கூடுதல் ஆணையர்(வ.வ.)/முதன்மைச் செயல் அலுவலர் அவர்களின் கடிதம் எண்.வநவா/27/2019, நாள் 10.05.2013

*****

ஆணை:–

வணிகர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு இன்னல்கள் நேரிடும்போது உதவி செய்வதற்கும் அவர்களின் நலனை பேணிடும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்திற்கு ரூ.2 கோடி வழங்கி ஆணையிடப்பட்டது. அதன்படி அந்நல வாரியம் 1989–ஆம் ஆண்டு முதல் இயங்கி

வருகிறது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் கொண்டு அமைக்கப்பட்டது. சட்டதிட்டங்கள், செயல்பாடுகள், கணக்குகள், தணிக்கைகள் மற்றும் அதிகாரம் ஆகியவற்றை வரையறுத்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலே மூன்று முதல் ஆறு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் தமிழ்நாடு வணிகர் நல வாரியம் பின்வருமாறு அமைத்து ஆணையிடப்பட்டது:-

| | | |
|---|---|---|
| 1. தலைவர் | : | மாண்புமிகு தமிழக முதல்வர் |
| 2. துணைத் தலைவர் | : | மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் |

3. உறுப்பினர்கள்:-

(அ) அலுவல்சார்ந்த உறுப்பினர்கள்:

1) செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை.
2) சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர்.
3) சிறப்பு செயலாளர், நிதித் துறை.
4) செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.
5) உறுப்பினர் செயலராக (அலுவல் வழி) வாரியத்தின் முதன்மைச் செயல் அலுவலர் செயல்படுவார்.

(ஆ) அலுவல்சாரா உறுப்பினர்கள்:

(i) அரசால் நியமனம் செய்யப்படும் 20 உறுப்பினர்கள்

(ii) இவர்களுடைய பதவிக்காலம் நியமனம் செய்யப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

(iii) அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமனம் செய்யப்படுபவர்கள்:-

(அ) இவ்வாரியத்தில் பணிபுரியும் அலுவலராகவோ, ஊழியராகவோ இருக்க கூடாது

(ஆ) விடுவிக்க பெறாத நொடிப்பு நிலையினராக (undischarged insolvent) இருக்கக் கூடாது

(இ) மனநலம் குன்றியவராக இருக்கக் கூடாது.

(ஈ) குற்றவியல் நீதிமன்றத்தால் ஒழுங்கீனத்திற்கான தண்டனை பெற்றவராக இருக்கக் கூடாது.

(உ) மேலும், அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை எதையும் நிலுவையில் வைத்திருப்பவராக இருக்கக் கூடாது.

3. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளும் ஏனையோர் மூன்று ஆண்டுகளும் செயல்படுவார்கள் என ஆணையிடப்பட்டது. மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்படி வாரியத்தில் 20 அலுவல் சாரா

உறுப்பினர்களை நியமித்தும், பதவிக் காலம் 2 ஆண்டுகள் என நியமனம் செய்தும் ஆணையிடப்பட்டது.

4. வணிகர் நல வாரியத்திலுள்ள அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் 21.07.2011 அன்றுடன் நிறைவு பெற்றதால், வணிகர் நல வாரியத்தில் புதிதாக அலுவல் சாரா உறுப்பினர்களை நியமிக்கும் பொருட்டு, தங்களின் கோட்டத்திற்கு உட்பட்ட தகுதிவாய்ந்த வணிகர்ளைத் தெரிவு செய்து அவர்களின் முழு விவரத்தினை அனுப்பி வைக்குமாறு அனைத்து இணை ஆணையர்களும் (வ.வ) கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும் அதற்கிணங்க, அனைத்து இணை ஆணையர்களும் (வ.வ) தங்களது கோட்டத்திற்கு உட்பட்ட தகுதி வாய்ந்த வணிகர்களின் முழு விவரங்களைப் பெற்று, தங்களை வணிகர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கும்படி கோரிக்கை வைத்துள்ளனர் என்றும் தெரிவித்து தமிழ்நாடு வணிகர் நல வாரிய கூடுதல் ஆணையர்/ முதன்மைச் செயல் அலுவலர் மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

5. தமிழ்நாடு வணிகர் நல வாரிய கூடுதல் ஆணையர்/ முதன்மை செயல் அலுவலரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது, பரிசீலனைக்குப்பின், தமிழ் நாடு வணிகர் நல வாரியத்தை கீழ்கண்டவாறு மாற்றியமைத்து அரசு ஆணையிடுகிறது:–

அ)

| | | |
|---|---|---|
| 1. தலைவர் | : | மாண்புமிகு தமிழக முதல்வர் |
| 2. துணைத் தலைவர் | : | மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் |

ஆ). உறுப்பினர்கள்:–

(i) **அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்**

1) செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை.
2) முதன்மைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர்.
3) முதன்மைச் செயலாளர், நிதித் துறை.
4) கூடுதல் தலைமைச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை.
5) உறுப்பினர் செயலராக (அலுவல் வழி) வாரியத்தின் முதன்மைச் செயல் அலுவலர் செயல்படுவார்.

(ii) **அலுவல் சாரா உறுப்பினர்கள்**

சமீப காலங்களில் வணிக வகைகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகி உள்ளதால் அனைத்து பிரிவுகளுக்கும் (Sector) பிரிதிநிதித்துவம் அளிக்கும் விதமாக அலுவல் சாரா உறுப்பினர்களின் எண்ணிக்கையை 20–லிருந்து 30–ஆக உயர்த்தியும்; அதன்படி, பின்வரும் உறுப்பினர்களை நியமனம் செய்தும் அரசு ஆணையிடுகிறது:–

| வ.எண் | பெயர் |
|---|---|
| | திருவாளர்கள் |
| 1. | எஸ். ரத்தினவேலு, மதுரை |
| 2. | சேப்பாக்கம் வி.பி.மணி, சென்னை |
| 3. | ஆர்.ஜி.தர்மராஜ், வேலூர் |
| 4. | எம்.கண்ணன், திருச்சி |
| 5. | என்.செந்தில்குமரன், திண்டுக்கல் |
| 6. | என்.பிரேம்நாத், விழுப்புரம் |
| 7. | எம்.சண்முகம், திருவண்ணாமலை |
| 8. | எஸ்.கே.கருணாநிதி, கடலூர் |
| 9. | சு.திருவண்ணாமலை, விருதுநகர் |
| 10. | கே. முருகேசன். மதுரை |
| 11 | எஸ்.காமராஜ், புதுக்கோட்டை |
| 12. | இராமு (எ) பொ.ராமசந்திரன், ஈரோடு |
| 13. | அ.முகமது, சிவகங்கை |
| 14 | ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், சென்னை |
| 15. | ஆர்,ரெங்கநாதன், தூத்துக்குடி |
| 16. | கே.வி.ஆர்.கந்தசாமி, பரமக்குடி |
| 17. | கே.எஸ்.வெங்கட்ராமன், கரூர் |
| 18. | எ.அரிகிருஷ்ணன், சென்னை |
| 19. | பக்கீர் யூசுப் அலி ஜாம்நகர்வாலா, சென்னை |
| 20. | எஸ்.முகமது ரஃபி, தஞ்சாவூர் |
| 21 | எ.ஜெயசீலன், சேலம் |
| 22. | சி.குமரேசன், திருவாரூர் |
| 23. | ரா.பாலசுந்தரம், சென்னை |
| 24. | ஷாஜி எ.எம். சதக்கத்துல்லா, சென்னை |

| | |
|---|---|
| 25. | எஸ்.சண்முகம், கடலூர் |
| 26. | எல்.செந்தில்நாதன், தஞ்சாவூர் |
| 27. | எஸ்.வைத்தியலிங்கம், தர்மபுரி |
| 28. | எஸ்.ராஜசேகர், திருவண்ணாமலை |
| 29. | கே.கே.செல்வன், சேலம் |
| 30. | ஜெகன் தாமோதரசாமி, கோயம்புத்தூர் |

6. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையே 2009–ஆம் ஆண்டைய அரசாணையிலும் தொடர்ந்துள்ளது. அதனை அடியொற்றி, மேலே மாற்றியமைக்கப்படும் வணிகர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாக இருக்கும் ஏனையோர் மூன்று ஆண்டுகள் செயல்படுவார்கள்.

7. இவ்வணிகர் நல வாரியம் வணிகவரி ஆணையரின் நிர்வாகத்தின் கீழ் செயல்படும்.

8. அலுவல் சாரா உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு தவிர மற்ற அனைத்து வகையிலும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏற்படுத்தப்பட்ட வணிகர் நல வாரியத்திற்குரிய வரன்முறைகளும், சட்டதிட்டங்களும் தற்போது இந்த அரசாணையில் மாற்றியமைக்கப்படும் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்திற்கும் பொருந்தும்.

(ஆளுநரின் ஆணைப்படி.)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசுச் செயலாளர்.

பெறுநர்

முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை–5
உறுப்பினர் செயலாளர், முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வணிகர் நல வாரியம், சென்னை–5
தலைமைச் செயலாளர், சென்னை–9
முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலாளர். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9
திரு. எஸ். ரத்தினவேலு, மதுரை
திரு. சேப்பாக்கம் வி.பி.மணி, சென்னை
திரு. ஆர்.ஜி.தர்மராஜ், வேலூர்
திரு. எம்.கண்ணன், திருச்சி
திரு. என்.செந்தில்குமரன், திண்டுக்கல்

திரு.என்.பிரேம்நாத், விழுப்புரம்
திரு. எம்.சண்முகம், திருவண்ணாமலை
திரு.எஸ்.கே.கருணாநிதி, கடலூர்
திரு. சு.திருவண்ணாமலை, விருதுநகர்
திரு. கே. முருகேசன். மதுரை
திரு. எஸ்.காமராஜ், புதுக்கோட்டை
திரு. இராமு (எ) பொ.ராமசந்திரன், ஈரோடு
திரு. அ.முகமது, சிவகங்கை
திரு.ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், சென்னை
திரு.ஆர்.ரெங்கநாதன், தூத்துக்குடி
திரு.கே.வி.ஆர்.கந்தசாமி, பரமக்குடி
திரு.கே.எஸ்.வெங்கட்ராமன், கரூர்
திரு.எ.அரிகிருஷ்ணன், சென்னை
திரு.பக்கீர் யூசுப் அலி ஜாம்நகர்வாலா, சென்னை
திரு.எஸ்.முகமது ரஃபி, தஞ்சாவூர்
திரு.எ.ஜெயசீலன், சேலம்
திரு.சி.குமரேசன், திருவாரூர்
திரு. ரா.பாலசுந்தரம், சென்னை
திரு.ஷாஜி எ.எம். சதகத்துல்லா, சென்னை
திரு.எஸ்.சண்முகம், கடலூர்
திரு.எல்.செந்தில்நாதன், தஞ்சாவூர்
திரு.எஸ்.வைத்தியலிங்கம், தர்மபுரி
திரு.எஸ்.ராஜசேகர், திருவண்ணாமலை
திரு.கே.கே.செல்வம், சேலம்
திரு.ஜெகன் தாமோதரசாமி, கோயம்புத்தூர்
மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைகள்)
மாநில கணக்காயர் (தணிக்கை)
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை-9
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை-9
இயக்குநர், செய்தித் துறை
இருப்புக் கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 5.1.2.14
7/7/23